Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 63 | உள்ளூர் - 04.03.2026 | புதன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 63 | வெளியூர் - 05.03.2026 | வியாழன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

விதியை மாற்றும் குறிப்பு.. கோடீஸ்வரர் ஆவீர்கள்!

உலக நாடுகளுக்கான கச்சா எண்ணெய் விநியோகம் பாதிப்பு!

தஞ்சையில் விஜய் ஆவேச பரப்புரை!

தமிழ்நாட்டில் மதுபானம் விற்கப்போகும் அனிருத்..!

## பிரதமர் திருச்சி வருகை!



சென்னை, மார்ச். 04–

மார்ச் 11ல் திருச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற உள்ள நிலையில், இந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்க உள்ளார் என்று தமிழக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் அறிவித்துள்ளார்,.

## ஹோலி: அனைவருக்கும் மகிழ்ச்சியின் வசந்தத்தைக் கொண்டுவரட்டும் - பிரதமர் மோடி வாழ்த்து!

புதுடெல்லி, மார்ச். 04–

நாடு முழுக்க இன்று ஹோலி பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஹோலி பண்டிகையை ஒட்டி பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். ஹோலி பண்டிகை புதிய ஆற்றலைச் சூழ்ந்துள்ளது, இதுவே அதன் மிகப்பெரிய சிறப்பு என்று பிரதமர் மோடி கூறினார்.



இது குறித்த x தளப் பதிவில், "என் சக குடிமக்கள் அனைவருக்கும் மனமார்ந்த ஹோலி வாழ்த்துக்கள். வண்ணங்களாலும், உற்சாகத்தாலும் நிறைந்த இந்தப் பண்டிகை, அனைவருக்கும் மகிழ்ச்சி மழையைப் பொழியட்டும். ஒவ்வொரு வாழ்க்கையும் மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் வெற்றியின் வண்ணங்களால் தெளிக்கப்படட்டும் – இதுவே எனது மனமார்ந்த விருப்பம்," என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சமத்துவம் பேணுவோம்! அய்யா வைகுண்டரின் பிறந்தநாளையொட்டி முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து...!

சென்னை, மார்ச். 04–

அய்யா வைகுண்டர் அவதார தினம் (பிறந்தநாள்) ஒவ்வொரு ஆண்டும் தமிழ் மாதமான மாசி மாதம் 20–ம் தேதி (தோராயமாக மார்ச் 4ந்தேதி) வெகுவிமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. 1833–ஆம் ஆண்டு மாசி 20–ல் திருச்செந்தூர் கடலில் இருந்து நாராயணனின் மகனாக அவர் அவதரித்ததாக நம்பப்படுகிறது. இந்த நாள் பெரும்பாலும் மார்ச் மாதம் 4–ம் தேதி (2025–ல் 193–வது அவதார தினம்) வருகிறது. இந்த ஆண்டு அவரது 194வது அவதான தினமாகும்.




இதையொட்டி, அவரது கோவில்களில் இன்று விசேஷ பூஜைகள் நடைபெறுகிறது.

இந்த நிலையில், அய்யா வைகுண்டரின் பிறந்தநாளையொட்டி முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து செய்தியை தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், இடுப்பில் இருந்த துண்டைத் தலைக்குக் கிரீடமாக மாற்றிய அய்யா வைகுண்டரை நாம் பெற்ற நாள்!

"கீழ் நோக்கிப் பிடித்தாலும், மேல் நோக்கியே எரியும் தீபத்தைப்போல, விளக்கின் ஒளியாய், வீரத் தனமாக இருங்கள்" எனச் சமத்துவக் கனலைச் சமூகத்தில் விதைத்து நிறைந்தவர் அய்யா வைகுண்டர்.

'தாழக் கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்' எனும் அவரது கூற்றையே ஆட்சிக்கான அடிப்படையாய்க் கொண்டு நலிந்தோரின் நலம் நாடும் அரசாக நமது திராவிட மாடல் அரசும் செயல்படுகிறது.

அய்யா வைகுண்டரின் பொன்மொழிகளைப் பின்பற்றி நடப்போம்! சமத்துவம் பேணுவோம்!





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் 63 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கத்தினை" திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன். சட்டமன்ற உறுப்பினர் எம். கே.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே. சிற்றரசு, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, உயர்கல்வித்துறை செயலாளர் பொ.சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் எ. சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


## வளைகுடா நாடுகளில் கட்டுப்பாட்டு அறை திறந்தது மத்திய அரசு; உதவி எண்கள் அறிவிப்பு!

புதுடெல்லி, மார்ச். 04–

போர் பதற்றம் எதிரொலியாக, வளைகுடா நாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கான சிறப்பு கட்டுப்பாட்டு அறையை மத்திய அரசு திறந்துள்ளது.

காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை சிறப்பு கட்டுப்பாட்டு அறை செயல்படும் என வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் அறிவித்தார்.

1800118797 என்ற இலவச எண்ணை தொடர்பு கொண்டு இந்தியர்கள் உதவி கோரலாம். +91 11 2301 2113, +91 11 2301 4104, +91 11 2301 7905 ஆகிய எண்களிலும் இந்தியர்கள் தொடர்பு கொள்ளலாம்.




இந்திய தூதரகங்கள் அறிவித்துள்ள அவசர உதவி எண்கள் பின்வருமாறு:

பஹ்ரைன்– +973 39418071

ஈரான்– +989128109115 / +989128109102 /+989128109109 / +989932179359

ஈராக்– +964 771 651 1185 / +964 770444 4899

இஸ்ரேல்– +972 54 7520711 / +972 54 2428378

ஐக்கிய அரபு அமீரகத்தில் தவிக்கும் இந்தியர்கள் விழிப்புடன் இருங்கள்; உதவி எண்களை வெளியிட்டு மத்திய அரசு அறிவுறுத்தல்

ஐக்கிய அரபு அமீரகத்தில் தவிக்கும் இந்தியர்கள் விழிப்புடன் இருங்கள்; உதவி எண்களை வெளியிட்டு மத்திய அரசு அறிவுறுத்தல்

ஜோர்டான்– +962 770 422 276

குவைத்– + 965 65501946

லெபனான்– +961 76860128

ஓமன்– +968 98282270 / 80071234

கத்தார்– +974 55647502

பாலஸ்தீனம்– +970 592916418

சவூதி அரேபியா (ரியாத்) – +966 11 4884697 / 800 247 1234

சவூதி அரேபியா (Jeddah): +966 126648660 / +966 12 2614093

ஐக்கிய அரபு எமிரேட்ஸ்– +971 543090571/ 800 46342

## உலக நாடுகளுக்கான கச்சா எண்ணெய் விநியோகம் பாதிப்பு

# ஹார்முஸ் ஜலசந்தியில்

## முடங்கிய 700 கப்பல்கள்!!

டெஹ்ரான், மார்ச். 04–

இஸ்ரேல் – ஈரான் போர் காரணமாக சுமார் 700 டேங்க்கர் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியில் முடங்கி உள்ளன. இதனால் உலக நாடுகளுக்கான கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த சனிக்கிழமை முதல் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. இதற்கு ஈரான் ராணுவமும் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

இந்தப் போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்லும் உலக நாடுகளுக்கு செல்லும் கச்சா எண்ணெய் கப்பல் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளது. இதனால் கிழக்கு–மேற்கு இடையிலான 86% எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு, எரிசக்தி சந்தை பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது.

கடற்படை பகுப்பாய்வு நிறுவனங்களான விண்ட்வர்ட் மற்றும் கெப்லர் தரவுகளின்படி, இந்த நீர்வழிப்பாதை அதிகாரப்பூர்வமாக மூடப்படவில்லை என்றாலும், நடைமுறையில் அது முடங்கியே உள்ளது.



மார்ச் 1–ம் தேதி 28 லட்சம் பேரல் எண்ணெயைச் சுமந்து சென்ற மூன்று கப்பல்கள் மட்டுமே ஹார்முஸ் ஜலசந்தியைக் கடந்தன. இது 2026–ன் தினசரி சராசரியான 1.98 கோடி பேரல்களில் இருந்து 86% சரிவாகும். மார்ச் 2–ம் தேதி அதிகாலை நிலவரப்படி, ஒரு சிறிய டேங்கர் மற்றும் ஒரு சரக்குக் கப்பல் மட்டுமே பிரதான பாதையில் நகர்ந்தன.

ஈரான் நாட்டைச் சேராத சுமார் 706 டேங்கர் கப்பல்கள் தற்போது ஜலசந்தியின் இருபுறமும் வரிசையாக நிற்கின்றன. இதில் 334 கச்சா எண்ணெய் தாங்கிகள், 109 கச்சா எண்ணெய் சுத்திகரிப்புப் பொருட்கள் கொண்ட கப்பல்கள் மற்றும் 263 சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் கப்பல்கள் அடங்கும். மேலும் 26 கப்பல்கள் சரியான இலக்கின்றி வளைகுடா பகுதிக்குள் மிதக்கின்றன.

ஓமன் வளைகுடாவிலும் நூற்றுக்கணக்கான கப்பல்கள் முடங்கி உள்ளன. எண்ணெய் சந்தையில் இதன் தாக்கம் உடனடியாகப் பிரதிபலித்தது. சவுதி அரேபியாவின் ராஸ் தனுரா சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கத்தாரின் எல்என்ஜி ஆலை மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து, ப்ரெண்ட் கச்சா எண்ணெய் விலை 10% உயர்ந்து ஒரு பேரல் 80 டாலராகவும், ஐரோப்பிய எரிவாயு விலை 40%–க்கும் அதிகமாகவும் உயர்ந்தது.

இந்த முடக்கம் சில நாட்களுக்குத் தொடர்ந்தால், கப்பல்களின் வரிசை அதிகரிக்கும் மற்றும் விநியோகம் முற்றிலும் சீர்குலையும். வளைகுடா நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களுக்கான காப்பீட்டுத் தொகை ஏற்கெனவே பலமடங்கு உயர்ந்துள்ளது. இது உலகளாவிய எரிபொருள் விலையில் பெரும் உயர்வை ஏற்படுத்தும்.

## தஞ்சையில் விஜய் ஆவேச பரப்புரை!

தஞ்சாவூர், மார்ச். 04–

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி அருகே நடைபெறும் தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள் மற்றும் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய விஜய்,

"விவசாயிகள் பற்றி தெரியவில்லை என்றாலும் அவர்களின் கஷ்டம் எனக்குத் தெரியும். நம்முடைய ஆட்சியில் விவசாயிகளின் பிரச்னைகள் தீர்த்துவைக்கப்படும். சமீபத்தில் தண்ணீர் இல்லாமல் தமிழ்நாடு திவால் ஆகப்போகிறது என்று ஒரு கட்டுரை படித்தேன். உண்மையில் மிகவும் வருத்தமாக இருக்கிறது. காரணம், நிலத்தடி நீரை பாதுகாக்காமல் இருப்பதுதான்.



மணலைக் கொள்ளையடித்தால் என்ன நடக்கும்? மலைகளை முழுங்கினால் என்ன நடக்கும்? கனிம வளங்கள் கொள்ளையடித்தால் பிறகு என்ன நடக்கும்?

மணல் கொள்ளைக்குக் காரணம் மணல் மாஃபியா குழுக்கள். அந்த மணல் மாஃபியா குழுக்களுக்கு ஆதரவு கொடுப்பது உங்களுடைய திமுக அரசுதானே! உங்களுடைய ஆட்சியில் தமிழ்நாடே திவால் ஆகப்போகிறது,

மழைநீரில் விவசாயிகள் உற்பத்தி செய்த நெல் வீணாகிறது. இதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

மாறாக, விவசாயிகளை குண்டர் சட்டத்தில் போடத்தான் தெரியும். விவசாயிகளுக்கு ஆதரவாக ஏதாவது ஒரு போராட்டத்தில் உடன் இருந்திருக்கிறீர்களா?

உங்கள் அரசு பொறுப்பேற்றதும் விவசாயிகளுக்காக பெரிய பெரிய திட்டங்களை செயல்படுத்தலாமே.. உண்மையில் உங்களுக்கு மக்கள் மீது அக்கறை இருக்கிறதா? நம் ஆட்சி பொறுப்பேற்றதும் பெரிய பெரிய திட்டங்களை செயல்படுத்துவோம்.

மீனவர்கள் கைது செய்யப்பட்டதும் மீனவர்களுக்காக கடிதம் எழுதுவது மட்டும் போதுமா? மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் இருக்க வேண்டும். மீனவர்கள் மீது யாரும் கை வைக்கக்கூடாது. மீனவர்களுக்காக தவெக ஆட்சி அமையும்.

ஒருவர் அமைதியாக இருந்தால் எதுவும் தெரியாது என்று நினைக்கின்றனர். 2 ஆவது முறையாக திமுக ஆட்சிக்கு வந்ததாக சரித்திரமே கிடையாது" என்று பேசினார்.

### ஜன நாயகன் பட விவகாரத்தை முதல்முறையாக பேசிய விஜய்..

"கரூரில் தொடங்கி ஜனநாயகன் வரை என்மீது பழிமேல் பழி போட்டார்கள். பலர் ஆதரவாக குரல் கொடுத்தார்கள். முதல்வரும் பட்டும் படாமல் குரல் கொடுத்தார்.

முதல்வரின் மனநிலை தற்போது எப்படி இருக்கும் தெரியுமா? ஏற்கெனவே கட்சிகாரங்க தூங்க விடுவதில்லை. தற்போது விஜய்யும் மக்கள் சக்தியுடன் வந்து தூங்க விடுவதில்லை. மக்களையும் கேள்வி கேட்க வைக்கிறார்.

ரூ. 1000–க்கு பதிலாக ரூ. 5,000 கொடுத்தால் அதையும் கேள்வி கேட்கிறார்கள். விசில் சப்தம் வேற விண்ணை எட்டுகிறது. கூட்டணி கட்சிகள் தொல்லை வேற தாங்க முடியவில்லை. பிரசாரத்தை முடக்கலாம்னு பார்த்தா அப்பவும் மக்கள் பின்னால் நிற்கிறார்கள். இந்த விஜய்யை முடக்கலாம், ஆனால் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிற விஜய்யை முடக்க முடியாது. உங்க அப்பாவுக்கு வெண்கல சிலை வைக்க நினைத்தபோது, மக்கள் பணத்தில் யாருக்கு புகழ் பாடப் பார்க்கிறீர்கள் என்று உச்ச நீதிமன்றம் கேட்டது. அதற்கு அர்த்தம் ஊரான் வீட்டு நெய்யில் இனிப்பு செய்யாதீங்க என்பதுதான். மக்கள் பிரச்னைக்கு நிதியில்லை, இதற்கு மட்டும் எங்கிருந்து வந்தது. மக்கள் பிரச்னையை முதலில் பாருங்கள். சிலையை எல்லாம் பிறகு பார்க்கலாம்.

சிலிண்டருக்கு ரூ. 100 மானியம், நீட்டை ஒழிப்போம் என்பதெல்லாம் என்ன ஆனது. முன்மாதிரி ஆட்சி கிடையாது, மோசடி ஆட்சி இது. மோசடி ஆட்சியில் முக்கியமான ஆட்சி இது" எனத் தெரிவித்தார்.

# தலையங்கம்

மதுரை மணி
புதன்கிழமை 04.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 20 -ம் தேதி

## அதிகமான சிடிசி குடுக்கிறாங்கனு இந்த தப்பை மட்டும் பண்ணிடாதீங்க!!



உலகளவில் மட்டுமல்ல இந்தியாவிலும் டெக் துறை பணி நீக்கங்கள் என்பது வழக்கமான ஒரு விஷயமாக மாறிவிட்டன. திடீரென நிறுவனங்கள் தங்களுடைய ஊழியர்களுக்கு ஒரே ஒரு மின்னஞ்சல் மூலம் நீங்கள் அனைவரும் பணிநீக்கம் செய்யப்பட்டு விட்டீர்கள் என அறிவித்து விடுகின்றனர். இந்த ஒரு மின்னஞ்சல் ஆயிரக்கணக்கான ஊழியர்களின் வாழ்வாதாரத்தையும் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கி விடுகின்றன. பெரிய பெரிய டெக் நிறுவனங்கள் தான் ஊழியர்கள் பணிநீக்கம் செய்கின்றன என கிடையாது , ஸ்டார்ட் அப் மற்றும் சிறு நிறுவனங்கள் கூட ஊழியர்களை பணிநீக்கம் செய்கின்றன. ஸ்டார்ட் அப் நிறுவனங்களிலும் ஊழியர்கள் பணி நீக்கத்தை தீவிர படுத்தியிருப்பது தான் தற்போது இளைஞர்களுக்கு பெரிய மனக் கவலையை ஏற்படுத்தி இருக்கிறது.

தனியார் வேலை வாய்ப்பு என்பதே பாதுகாப்பற்றது என்ற ஒரு மனநிலையை கொண்டு வந்திருக்கிறது. பெங்களூருவை சேர்ந்த ஒரு ஐடி ஸ்டார்ட் அப் நிறுவனம் தங்களுடைய ஊழியர்களில் 40 சதவீதம் பேரை ஒரே நாளில் வேலையில் இருந்து நீக்கி இருக்கிறதாம். பட்டய கணக்காளராக இருக்கும் அர்பித் கோயல் என்பவர் தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், என்னுடைய நண்பர் ஒருவர் பெங்களூருவை சேர்ந்த ஒரு ஐடி ஸ்டார்ட் அப் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். அவருடைய நிறுவனம் அண்மையில் 40 சதவீதம் ஊழியர்களை ஒரே நாளில் பணி நீக்கம் செய்திருக்கிறது. இது ஒரு உண்மையான சம்பவம் என கூறியுள்ளார். அவர் 92 லட்சம் ரூபாய் சிடிசி கொண்டவர், பணிநீக்கங்கள் தற்போது அதிகரித்துவிட்டன எனக் கூறியிருக்கிறார். அவருடைய இந்த பதிவு ஆயிரக்கணக்கானவர்களின் பார்வையை பெற்றிருக்கிறது.

அதிகமான சிடிசி கிடைக்கிறது என்பதை நம்பி சென்றால் அங்கே பணி பாதுகாப்பு இல்லை என ஒரு நபர் பதிவு செய்திருக்கிறார். ஒரு நிறுவனம் தொடங்கப்பட்டிருக்கிறது லட்சக்கணக்கில் சம்பளத்தை தூக்கி கொடுக்கிறார்கள் என்பதற்காக நம்பி வேலைக்கு சேர்ந்தால் திடீரென ஒரு நாள் உங்களுக்கு வேலை இல்லை என கூறுகிறார்கள் என பலரும் இந்த நிறுவனத்தின் ஊழியர்களை கண்டு புலம்பி வருகின்றனர்.

இவ்வளவு அதிக சம்பளம் இருக்கக்கூடிய நபர், சம்பளம் நிறைய கிடைக்கிறதே என கோடிக்கணக்கில் வீடு வாங்கியிருப்பார் இந்த திடீர் வேலை இழப்பு அவருக்கு மிகப்பெரிய இஎம்ஐ சுமையை ஏற்படுத்தியிருக்கிறது என ஒரு நபர் பதில் அளித்துள்ளார். பெரும்பாலான நபர்கள் தங்களுடைய தற்போதைய சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டுதானே வங்கிகளில் வீட்டு கடன் உள்ளிட்டவற்றை வாங்குகிறார்கள் திடீரென அந்த சம்பளமே இல்லை எனும் போது நிலைமை

மோசம் அடைந்து விடுகிறது என மற்றொருவர் கூறியிருக்கிறார். இதே நிறுவனத்தில் ஒரு பெண் பேறுகால விடுப்புக்காக விண்ணப்பம் செய்ய வார காலம் இருந்தபோது பணி நீக்கம் செய்யப்பட்டு இருப்பதாக அர்பித் கோயல் கூறியுள்ளார். பணிநீக்கங்கள் சம்பள இழப்பை மட்டுமல்ல மனதளவிலும் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன என பலரும் அதில் பதில் தெரிவித்துள்ளனர்.

# புதுச்சேரியில் 75 மின்சார பேருந்துகள்: பிரதமர் மோடி அறிவிப்பு!




புதுச்சேரி , மார்ச். 04–
கிரீன்செல் மொபிலிட்டி (GCM), இந்தியாவின் மிகப்பெரிய மின்சார பேருந்து தளம் மற்றும் எவர்சோர்ஸ் கேபிட்டலின் முக்கிய நிறுவனமாக, புதுச்சேரியில் 75 அதிநவீன மின்சார பேருந்துகளை செயல்படுத்தும் திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த பேருந்துகள் 25 (9 மீ) மற்றும் 50 (12 மீ) அளவுகளில், அதிக பேட்டரி திறன் மற்றும் டிரங்க்/நகர்வழித் தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. EKA மொபிலிட்டி யுடன் இணைந்து, மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் இந்த சேவை, பயணிகள் தகவல் அமைப்புகள், ITMS, கேமராக்கள் மற்றும் மாற்றுத்தி றனாளிகள் உள்கட்டமைப்புகள் போன்ற தொழில்நுட்ப வசதிகளுடன் பாதுகா ப்பான, நம்பகமான போக்குவரத்தை உறுதி செய்கிறது. கிரீன்செல் மொபிலிட்டியின் நிர்வாக இயக்குநர் மற்றும் CEO திரு. தேவேந்திர சாவ்லா, புதுச்சேரியுடன் இணைந்து இந்திய நகர்ப்புறங்களில் நிலையான மின்சார போக்குவரத்து சூழலை உருவாக்கும் உறுதியை வலியுறுத்தினார். நிறுவனம் பல மாநிலங்களில் பெரிய அளவிலான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது: உத்தரபிரதேசம் (700 பேருந்துகள்), சூர் (150), மத்தியப் பிரதேசம் (582), ஆந்திரா (750), தெலுங்கானா (915), கர்நாடகம் (400), டெல்லி (570), மற்றும் MSRTC க்காக 50 இன்டர்சிட்டி மின்சார பேருந்துகள். எவர்சோர்ஸ் கேபிட்டலின் ஆதரவுடன், கிரீன்செல் மொபிலிட்டி நாடு முழுவதும் 1,200 க்கும் மேற்பட்ட மின்சார பேருந்துகளை இயக்குகிறது, 270 க்கும் மேற்பட்ட சார்ஜிங் நிலையங்களுடன். தேசிய மின்–பஸ் திட்டம் மற்றும் PM சேவா மின்–மொபிலிட்டி திட்டத்துடன் இணைந்து, நிறுவனம் eMaaS சேவையின் மூலம் நகர்க் மற்றும் இன்டர்சிட்டி போக்குவரத்தை விரிவுபடுத்தி, பூஜ்ஜிய–உமிழ்வு சுற்றுச்சூழல் சூழலை உருவாக்க அரசு மற்றும் போக்குவரத்து அதிகாரிகளுடன் சேர்ந்து செயல்படுகிறது. நியூகோ இன்டர்சிட்டி பிராண்டின் மூலம் 300 க்கும் மேற்பட்ட எலெக்ட்ரிக் கோச்களுடன் 100 க்கும் மேற்பட்ட இடங்களை இணைக்கும் பிரீமியம் சேவையும் வழங்கப்படுகிறது.

# தமிழ்நாட்டில் வேதாந்து ஜேஇஇ மெயின் 2026 வெற்றி: 345 மாணவர்கள் 90%க்கு மேல் மதிப்பெண் சாதனை!

பாண்டிச்சேரி, மார்ச். 04–
வேதாந்து மாணவர்கள் இந்த ஆண்டு தேர்வில் தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மொத்தம் 345 மாணவர்கள் 90%க்கு மேல் மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளனர். மாநிலத்தின் தலைசிறந்த சாதனையாளர்களில் பரமேஸ்வர் M 99.92% பெற்று முன்னிலை வகித்தார்; அவரைத் தொடர்ந்து வருண் ஆதித்யா S 99.77% மற்றும் பூமிகா சர்மா 99.75% பெற்று அதிக மதிப்பெண் பட்டியலில் இடம்பிடித்தது.

மேலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 வேதாந்து மாணவர்கள் 99.5%க்கு மேல் மதிப்பெண் பெற்றுள்ளதுடன், 26 மாணவர்கள் 99%க்கு மேல் மதிப்பெண் பெற்று உயர்ந்த சாதனை புரிந்துள்ளனர். இவ்வாறு மாநிலம் முழுவதும் மாணவர்கள் தொடர்ந்து சிறந்த கல்வித் திறனை




வெளிப்படுத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு முழுவதும் 20 Learning Centres–ஐ இயக்கும் Vedantu, தனது இரண்டாவது முழுமையான கல்வியாண்டில் முன்னேற்றப் பாதையில் உள்ளது.

Ved AI எனும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் தனிப்பட்ட கற்றல் அமைப்பு, Smart Clickers மற்றும் 24×7 Insta Solve போன்ற வசதிகள் மூலம் மாணவர்களின் கற்றலை தனிப்பயனாக்கு, உடனடி மதிப்பீடு மற்றும் வழிகாட்டுதலை வழங்கி கல்வித் தரத்தை உயர்த்தி வருகிறது.

# எஸ்கார்ட்ஸ் குபோடா லிமிடெட் பவர்டிராக் ‘சௌர்யா’ சீரிஸ் அறிமுகம்; சேற்றுழவு நெல் சாகுபடிக்கான தென்னக சிறப்பு டிராக்டர்கள்!

கடலூர் , மார்ச். 04–
எஸ்கார்ட்ஸ் குபோடா லிமிடெட் நிறுவனம், பவர் டிராக் பிராண்டின் கீழ் தென்னிந்திய சேற்றுழவு மற்றும் நெல் சாகுபடிக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ‘சவுத் ஸ்பெஷல்’ டிராக்டர் சீரிஸான ‘சௌர்யா’–வை அறிமுகப்படுத்தியுள்ளது. 39 ஹெச்பி முதல் 52 ஹெச்பி வரையிலான ஐந்து வகைகளில் கிடைக்கும் இந்த சீரிஸ், தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் ஈரநில விவசாய தேவைகளை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பவர் டிராக் பிராண்டின் கீழ் சுற்றுலாவுக்கு முக்கியத்துவம் அளிக்கும் முதல் பிரத்யேக வரிசை இதுவாகும்.




‘சௌர்யா’ சீரிஸ், ஈரநில மற்றும் நீர் தேங்கும் வயல்களில் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் கேசட் டைப் சீலிங், 3.1 மீட்டர் குறைந்த திருப்பு ஆரம், 8 ஃபார்வர்ட் மற்றும் 2 ரிவர்ஸ் கியர் களுடன் நிலையான மெஷின் கியர்பாக்ஸ், 1600 2000 கிலோ வரையிலான ஹைட்ராலிக் லிப்ட் திறன், டுயல் மற்றும் ரிவர்ஸ் PTO வசதிகள் போன்ற அம்சங்களுடன் வடிவமைக்க ப்பட்டுள்ளது. இது சிறிய மற்றும் நடுத்தர நில அளவுகளுக்கு ஏற்ற நம்பகமான செயல்பாட்டை வழங்குகி றது.

அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் Nikhil Nanda, “தென்னிந்தியா எங்கள் அடுத்த கட்ட வளர்ச்சியில் முக்கிய மையமாக உள்ளது. பயன்பாடு சார்ந்த உயர்தர தயாரிப்புகள் மூலம் இந்த சந்தையில் உங்கள் இருப்பை வலுப்படுத்துவதே எங்கள் நோக்கம்; சௌர்யா அறிமுகம் அதற்கான முக்கியமான படியாகும்,” என்றார்.

# எஸ்கார்ட்ஸ் குபோடா லிமிடெட் ‘சவுத் ஸ்பெஷல்’ சௌர்யா டிராக்டர் சீரிஸ் அறிமுகம்; தென்னக நெல் விவசாயத்திற்கு பிரத்யேக கவனம்

சென்னை ,மார்ச். 04–
எஸ்கார்ட்ஸ் குபோடா லிமிடெட் நிறுவனம், பவர் டிராக் பிராண்டின் கீழ் தென்னிந்திய சேற்றுழவு மற்றும் நெல் சாகுபடிக்காக பிரத்யேகமாக வடிவமைக்க ப்பட்ட ‘சவுத் ஸ்பெஷல்’ டிராக்டர் சீரிஸான ‘சௌர்யா’–வை அறிமுகப்படுத்தியு ள்ளது. 39 ஹெச்பி முதல் 52 ஹெச்பி வரையிலான ஐந்து வகைகளில் கிடைக்கும் இந்த சீரிஸ், தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் ஈரநில விவசாய தேவைகளை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பவர் டிராக் பிராண்டின் கீழ்




சுற்றுலாவுக்கு முக்கியத்துவம் அளிக்கும் முதல் பிரத்யேக வரிசை இதுவாகும்.

‘சௌர்யா’ சீரிஸ், ஈரநில மற்றும் நீர் தேங்கும் வயல்களில் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் கேசட் டைப் சீலிங், 3.1 மீட்டர் குறைந்த திருப்பு ஆரம், 8 ஃபார்வர்ட் மற்றும் 2 ரிவர்ஸ் கியர் களுடன் நிலையான மெஷின் கியர்பாக்ஸ், 1600 2000 கிலோ வரையிலான ஹைட்ராலிக் லிப்ட் திறன், டுயல் மற்றும் ரிவர்ஸ் PTO வசதிகள் போன்ற அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது சிறிய மற்றும் நடுத்தர நில அளவுகளுக்கு ஏற்ற நம்பகமான செயல்பாட்டை வழங்குகிறது.

அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் Nikhil Nanda, “தென்னிந்தியா எங்கள் அடுத்த கட்ட வளர்ச்சியில் முக்கிய மையமாக உள்ளது. பயன்பாடு சார்ந்த உயர்தர தயாரிப்புகள் மூலம் இந்த சந்தையில் உங்கள் இருப்பை வலுப்படுத்துவதே எங்கள் நோக்கம்; சௌர்யா அறிமுகம் அதற்கான முக்கியமான படியாகும்,” என்றார்.

# எஸ்கார்ட்ஸ் குபோடா லிமிடெட் ‘சவுத் ஸ்பெஷல்’ சௌர்யா டிராக்டர் சீரிஸ் அறிமுகம்; தென்னக நெல் விவசாயத்திற்கு பிரத்யேக கவனம்!

கோயம்புத்தூர் . மார்ச். 04–
எஸ்கார்ட்ஸ் குபோடா லிமிடெட் நிறுவனம், பவர் டிராக் பிராண்டின் கீழ் தென்னிந்திய சேற்றுழவு மற்றும் நெல் சாகுபடிக்காக பிரத்யேகமாக வடிவமை க்கப்பட்ட ‘சவுத் ஸ்பெஷல்’ டிராக்டர் சீரிஸான ‘சௌர்யா’–வை அறிமு கப்படுத்தியுள்ளது. 39 ஹெச்பி முதல் 52 ஹெச்பி வரையிலான ஐந்து வகைக ளில் கிடைக்கும் இந்த சீரிஸ், தெலுங்கா னா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்க ளில் ஈரநில விவசாய தேவைகளை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டு ள்ளது. பவர் டிராக் பிராண்டின் கீழ் சுற்று லாவுக்கு முக்கியத்துவம் அளிக்கும் முதல் பிரத்யேக வரிசை இதுவாகும்.





‘சௌர்யா’ சீரிஸ், ஈரநில மற்றும் நீர் தேங்கும் வயல்களில் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் கேசட் டைப் சீலிங், 3.1 மீட்டர் குறைந்த திருப்பு ஆரம், 8 ஃபார்வர்ட் மற்றும் 2 ரிவர்ஸ் கியர் களுடன் நிலையான மெஷின் கியர்பாக்ஸ், 1600 2000 கிலோ வரையிலான ஹைட்ராலிக் லிப்ட் திறன், டுயல் மற்றும் ரிவர்ஸ் PTO வசதிகள் போன்ற அம்சங்களுடன் வடிவமை க்கப்பட்டுள்ளது. இது சிறிய மற்றும் நடுத்தர நில அளவுகளுக்கு ஏற்ற நம்பகமான செயல்பாட்டை வழங்குகி றது. அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் Nikhil Nan–da, “தென்னிந்தியா எங்கள் அடுத்த கட்ட வளர்ச்சியில் முக்கிய மையமாக உள்ளது. பயன்பாடு சார்ந்த உயர்தர தயாரிப்புகள் மூலம் இந்த சந்தையில் உங்கள் இருப்பை வலுப்படுத்துவதே எங்கள் நோக்கம்; சௌர்யா அறிமுகம் அதற்கான முக்கியமான படியாகும்,” என்றார்.

# அருதா SIF அறிமுகம்: ‘அருதா ஈக்விட்டி நீண்ட-குறுகிய நிதி’ NFO மார்ச் 5 முதல்!




சென்னை, மார்ச். 04–
சென்னை அருதா SIF, பந்தன் மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனத்தின் சார்பில், ‘அருதா ஈக்விட்டி லாங்-ஷார்ட் ஃபண்ட்’ என்ற புதிய திறந்த வகை ஈக்விட்டி முதலீட்டு திட்டம் சிறப்பு முதலீட்டு நிதி (SIF) கட்டமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய நிதி வழங்கல் (NFO) 2026 மார்ச் 5 அன்று தொடங்கி மார்ச் 18 அன்று நிறைவடைகிறது. சந்தை அதிர்வுகள் மற்றும் மாறும் துறை முன்னிலைகளின் சூழலில் தகுந்த மாற்றங்களைச் செய்யக்கூடிய போர்ட்ஃபோலியோவை நாடும் முதலீட்டாளர்களுக்கு இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

திட்ட ஆவணத்தின் படி, இந்த நிதி குறைந்தபட்சம் 80% முதல் அதிகபட்சம் 100% வரை ஈக்விட்டி மற்றும் தொடர்புடைய கருவிகளில் முதலீடு செய்யும்; மேலும் 25% வரை ஹெட்ஜ் செய்யப்படாத டெரிவேட்டிவ் ஷார்ட் எக்ஸ்போஷர் எடுக்கலாம். லாங் ஈக்விட்டி, ஷார்ட் ஈக்விட்டி, கவர்ட் கால்கள் மற்றும் கடன் முதலீடுகள் என நான்கு வருமான இயந்திரங்கள் அடிப்படையாகக் கொண்டு, சந்தை உயர்வு மற்றும் சரிவு கட்டங்களிலும் வாய்ப்புகளை பயன்படுத்துவது இந்த உத்தியின் நோக்கமாகும். அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த Vishal Kapoor, தலைமை நிர்வாக அதிகாரி, Bandhan AMC Limited, “வளர்ச்சியில் பங்கேற்கவும், அதே நேரத்தில் அபாயத்தை கட்டுப்படுத்தப்பட்ட முறையில் நிர்வகிக்கும் விரும்பும் முதலீட்டாளர்களுக்கான கட்டமைக்கப்பட்ட லாங்–ஷார்ட் அணுகுமுறையைக் கொண்ட திட்டமாக இது இருக்கும்,” என்றார்.



# உங்கள் விதியை மாற்றும் ஒரு குறிப்பு.. நீங்கள் கோடீஸ்வரர் ஆவீர்கள்!



வாஸ்து சாஸ்திரத்தின்படி, வீட்டில் மணி பிளாண்ட் வைத்திருப்பது மிகவும் நல்லது. யாருடைய வீட்டில் பணச்செடி இருக்கிறதோ அவர்கள் நிதி ரீதியாகவும், ஆரோக்கியமாகவும், தொழில் ரீதியாகவும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. இருப்பினும், ஒருவரின் வீட்டில் மணி பிளாண்ட் இருந்தால், அந்த செடி யின் அருகில் இந்த பொருளை வைத்திருப்பது நல்ல அதிர்ஷ்டத்தைத் தருவது மட்டுமல்லாமல் செல்வத்தையும் அதிகரிக்கும். எனவே இதைப் பற்றி இப்போது அறிந்து கொள்வோம்.

வீட்டில் மணிபிளாண்ட் வைத்திருப்பது அனைத்து வகையான நன்மைகளையும் தருகிறது. இது வீட்டிற்கு அழகைத் தருவது மட்டுமல்லாமல், மன அமைதியையும் தருகிறது. இது வீட்டில் நேர்மறை ஆற்றலை ஊக்குவிக்கிறது. எனவே, பலர் அதை பிரதான நுழைவாயிலில் உள்ள வாழ்க்கை அறை அல்லது பால்கனியில் வளர்க்கிறார்கள்.

இருப்பினும், வாஸ்து சாஸ்திரத்தின்படி, மணிபிளாண்ட்டை நட்ட பிறகு அதன் மீது பால் ஊற்றுவது பல அற்புதமான நன்மைகளைக் கொண்டுள்ளது. பால் தூய்மையின் சின்னம், எனவே பணச்செடியில் பால் ஊற்றுவது கடன் சுமையை நீக்கி நிதி செழிப்பைக் கொண்டுவருவதாகக் கூறப்படுகிறது. இது தவிர, இது லட்சுமி தேவியின் ஆசீர்வாதத்தையும் தருகிறது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

மணி பிளாண்ட் நடப்பட்ட மண்ணில் சிறிது சர்க்கரையைச் சேர்ப்பதும் மிகவும் நல்லது என்று கூறப்படுகிறது. இது மரத்தை வேகமாக வளரச் செய்யும். இது நிதி வளர்ச்சியைத் தரும் என்றும் கூறப்படுகிறது. சர்க்கரை இனிமை மற்றும் நல்லிணக்கத்தின் சின்னமாக இருப்பதால், பணச்செடியில் சர்க்கரையை வைப்பது அனைத்தையும் ஒன்றாகக் கொண்டுவரும்.


மணி பிளாண்டை சுற்றி சிவப்பு நூல் கட்டுவது மிகவும் புனிதமானது. வாஸ்து சாஸ்திரத்தின்படி, ஒருவரின் வீட்டில் பணச்செடி இருந்தால், பானையைச் சுற்றி அல்லது செடியைச் சுற்றி சிவப்பு நூல் கட்டுவது லட்சுமி தேவியின் ஆசிகளைப் பெற்று வீட்டில் செல்வத்தைப் பெருக்கும். வீட்டில் அமைதியான சூழ்நிலை இருக்கும்.

மேலும், வாஸ்து சாஸ்திரத்தின்படி, மணி பிளாண்டை சரியான திசையில் வைக்க வேண்டும். கிழக்கு அல்லது வடக்கு திசையில் வைப்பது அனைத்து நன்மைகளையும் தரும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக வெள்ளைப் பானையில் வளர்ப்பது நேர்மறை ஆற்றலை அதிகரிக்கும். குறிப்பு: இந்தச் செய்தியில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் மத நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. வாசகர்களின் ஆர்வத்தின்படி.. பல அறிஞர்களின் பரிந்துரைகள் அவர்கள் கூறிய புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகின்றன..

# ஈரானின் புதிய உச்ச தலைவராக கமேனியின் மகன் மோஜ்தபா தேர்வு!



ஈரான், மார்ச். 04–
அலி அயத்துல்லா கமேனி – மோஜ்தபா கமேனி. மறைந்த அலி அயத்துல்லா கமேனியின் மகன் மோஜ்தபா கமேனி ஈரானின் புதிய உச்ச தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக ஈரான் இண்டெர்நேஷனல் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.



## சினிமா துளிகள்..!

### தமிழ்நாட்டில் மதுபானம் விற்கப்போகும் அனிருத்..!




திரையுலகில் கொடிக்கட்டி பறக்கும் இசையமைப்பாளரான அனிருத் ரவிச்சந்தர் சமீப த்தில் புது புது வர்த்தகத்தில் இறங்கி வருகிறார். 2024ல் மதுபான தயாரிப்பிலும், விற்பனையில் இறங்கிய அனிருத் தற்போது இந்தியாவில் ப்ரீமியம் மதுபான மார்கெட்டில் முக்கிய இடத்தை பிடிக்க தீவிரமாக முயற்சி செய்து வருகிறார். ராக்ஸ்டார் அனிருத் பாட்டு பாடி பார்த்திருப்போம், இப்போ மதுபான வியாபாரியாக பார்க்கப்போகிறோம். முதலில் வெளிநாட்டில் மட்டுமே விற்பனை செய்து வந்த அனிருத் தற்போது இந்தியாவில் விற்பனையை துவங்கியுள்ளார். அடுத்தாக தமிழ்நாட்டில் விற்பனை துவங்க உள்ளதாகவும் அனிருத் சமீபத்திய இண்டர்வியூவில் தெரிவித்தார். அனிருத் தனியாக இந்த மதுபான வர்த்தகத்தை செய்யவில்லை, தெலுங்கு நடிகர் ராணா டகுபதி மற்றும் தொழிலதிபர் ஸ்ரீ ஹர்ஷா ஆகியோர் இணைந்து தொடங்கிய பிரீமியம் டக்கிலா பிராண்ட் தான் லோகா லோகா, நேற்று பெங்களூரில் அதிகாரப்பூர்வமாக விற்பனைக்கு அறிமுகமாகியுள்ளது. டெல்லி மற்றும் மும்பையில் ஏற்கனவே வெற்றிகரமாக விற்பனையாகி வரும் இந்த பிராண்ட், பெங்களூரு சந்தையில் தனது பிளான்கோ மற்றும் ரெபோசாடோ வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது

லோகா லோகா கடந்த ஆண்டு இந்தியாவில் அறிமுகமானதிலிருந்து பெரும் வரவேற்பை பெற்று வருகிறது. உலக அளவில் பல விருதுகளை வென்றுள்ள இந்த பிராண்ட் டக்கிலா மதுபானம், தற்போது அமெரிக்காவின் முக்கிய நகரங்களிலும், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா உள்ளிட்ட சந்தைகளில் விற்பனையாகி வருகிறது. அடுத்ததாக இங்கிலாந்து மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் விரிவாக்கம் திட்டமிடப்பட்டுள்ளது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## வைட்டமின் டி குறைபாடா?! இந்த முடிவில்லா பிரச்சனைகள் வரலாம்..!




நவீன யுகத்தில் மாறிவரும் வாழ்க்கை முறையால் வைட்டமின் டி குறைபாடு நமது ஆரோக்கியத்தை பாதிக்கும் மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாக மாறியுள்ளது. முன்னதாக, எலும்பு ஆரோக்கியத்திற்கு மட்டுமே வைட்டமின் டி தேவை என்று நம்பப்பட்டது, ஆனால் சமீபத்திய ஆராய்ச்சி மற்றும் மருத்துவ நிபுணர்களின் கூற்றுப்படி, இது உடல் ஆரோக்கியத்துடன் மன ஆரோக்கியத்தையும் பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

நம் உடலில் வைட்டமின் டி போதுமான அளவு இருக்கும்போது, அது ஒரு வைட்டமினாக மட்டுமல்லாமல், ஒரு நரம்பியக்கடத்தியாகவும் செயல்படுகிறது. அதாவது, இது நமது நரம்பு மண்டலத்திலிருந்து சில முக்கியமான ஹார்மோன்களின் வெளியீட்டை ஒழுங்குபடுத்துகிறது.

செரோடோனின் விளைவு: வைட்டமின் டி நமது மூளையில் மகிழ்ச்சியையும் அமைதியையும் தரும் ஒரு ஹார்மோன் 'செரோடோனின்' உற்பத்திக்கு உதவுகிறது. உடலில் வைட்டமின் டி குறைவாக இருந்தால், செரோடோனின் அளவு குறைகிறது. இது தூக்கமின்மை, எரிச்சல், மன அமைதி இல்லாமை, மெதுவான செரிமானம் மற்றும் கடுமையான மனச்சோர்வு போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

நினைவாற்றல் மற்றும் மூளை செயல்பாடு: வைட்டமின் டி குறைபாடு மூளையை கட்டுப்படுத்தும் திறனைக் குறைக்கிறது. விஷயங்களை விரைவாக மறந்துவிடுவது, நல்ல முடிவுகளை எடுக்க முடியாமல் போவது போன்ற பிரச்சனைகள் எழுகின்றன. வைட்டமின் டி குறைபாட்டால் ஏற்படும் பிற முக்கிய பிரச்சனைகளை டாக்டர் அனுப் பின்வருமாறு விளக்குகிறார்.

வீக்கம்: வைட்டமின் டி குறைபாட்டின் போது, உடலின் செல்கள் உடைந்து போகத் தொடங்குகின்றன. குறிப்பாக நரம்பு மண்டலத்தில் வீக்கம் ஏற்படும் போது, நரம்புகள் பலவீனமடைந்து நாள்பட்ட நரம்பியல் நோய்களுக்கு வழிவகுக்கும். வைட்டமின் டி இல்லாமல், உடல் கால்சியத்தை உறிஞ்ச முடியாது. இது உடையக்கூடிய எலும்புகள், மூட்டு வலி, முதுகுவலி மற்றும் தீவிர சோர்வு போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும்.

**வைட்டமின் டி உடலில் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?**

வைட்டமின் டி இயற்கையாகவே நம் உடலில் உற்பத்தி செய்யப்படுகிறது, ஆனால் அதற்கு சூரிய ஒளி தூண்டுதல் தேவைப்படுகிறது. இதற்குப் பின்னால் உள்ள அறிவியல் செயல்முறையை டாக்டர் அனுப் விளக்குகிறார். சூரிய ஒளி நம் தோலில் படும்போது, தோலில் உள்ள 7–டீஹைட்ரோகொலெஸ்டிரால் செயல்படுத்தப்படுகிறது.

இது முதலில் கல்லீரலையும் பின்னர் சிறுநீரகங்களையும் அடையும் ஒரு பொருளை உருவாக்குகிறது. அங்கு, அது செயலில் வைட்டமின் டி ஆவதற்கு முன்பு வேதியியல் மாற்றங்களுக்கு உட்படுகிறது. எனவே, ஒருவருக்கு ஆரோக்கியமான கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள் இருந்தால், போதுமான சூரிய ஒளி கிடைத்தால், அவர்களுக்கு வைட்டமின் டி குறைபாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு.

மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த, தினமும் குறைந்தது அரை மணி நேரம் வெயிலில் செலவிட மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். குறிப்பாக காலையில் வெயிலில் நடப்பது அல்லது உடற்பயிற்சி செய்வது உடலுக்குத் தேவையான வைட்டமின் டி–யை இயற்கையாகவே வழங்குகிறது. நீங்கள் அடிக்கடி வலிகள் மற்றும் வலிகளை உணர்ந்தால் அல்லது மன அமைதியின்மை உணர்ந்தால், உடனடியாக வைட்டமின் டி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.



மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் மதுரை மாவட்டம்,டி.ஆர்.ஒ காலனியில் ரூபாய் 5.19 கோடி மதிப்பீட்டில் 200 மகளிர் தங்கும் வகையில் புதிதாக கட்டப்பட்டுள்ள தோழி பணிபுரியும் மகளிர் விடுதியை ஆய்வு செய்து பார்வையிட்டார். இவ்விடுதிகளில் பயோமெட்ரிக் உள் நுழைவு, 24x7 பாதுகாப்பு வசதி, Wi–Fi வசதி, சிசிடிவி வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், ஆரோக்கியமான உணவு, பகல் நேர குழந்தைகள் பராமரிப்பு வசதி, சுடுநீர் வசதி, சலவை இயந்திரம், இஸ்திரி வசதி, வாகன நிறுத்துமிடம் மற்றும் பொழுதுபோக்கு அறை போன்ற வசதிகள், குறைந்த வாடகையில் வழங்கப்பட உள்ளன.

# ரூ.1,88,70,00,00,00,000: ஈரான் மீதான தாக்குதலில் அமெரிக்காவின் செலவு!

அமெரிக்கா, மார்ச். 04–

ஈரான் மீது கடந்த சனிக்கிழமை முதல் அமெரிக்கா – இஸ்ரேல் கூட்டுத் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஈரான் உச்சத்தலைவர் காமேனி கொல்லப்பட்டார். மேலும் 700க்கும் அதகமானோர் கொல்லப்பட்டனர்.



பதிலடியாக இஸ்ரேல் மீதும் மத்திய கிழக்கில் அமெரிக்க படைத்தளங்கள் உள்ள நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

போரின் முதல் நாளில் அமெரிக்கா சுமார் 779 மில்லியன் டாலர் (ரூ. 6,900 கோடி) செலவிட்டுள்ளது.

இந்தப் போர் தொடர்ந்தால், அமெரிக்காவிற்கு மொத்தம் 210 பில்லியன் டாலர்கள் (ரூ. 18.87 லட்சம் கோடி) செலவாகும் என்று நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

இது தவிர, இஸ்ரேலுக்கு வழங்கப்படும் நிதி உதவியையும் கருத்தில் கொண்டால், இந்த செலவு மேலும் அதிகரிக்கும்.

அதுமட்டுமின்றி மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க படைத்தளங்கள் பல, ஈரானின் ஏவுகணை தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா தனது மிகவும் விலையுயர்ந்த ஆயுதங்களை இந்த போரில் பயன்படுத்துகிறது.

USS Gerald R. Ford உட்பட உலகின் மிகப்பெரிய இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்களை அமெரிக்கா இந்த போரில் பயன்படுத்துகிறது.

இந்தக் கப்பல்கள் ஒவ்வொன்றும் இயக்க ஒரு நாளைக்கு ரூ. 58 கோடி செலவாகும்.

மேலும், வீரர்களைக் குவிப்பதற்கும் அவர்களின் தேவைகளுக்கும் இதுவரை சுமார் ரூ. 5,500 கோடி செலவிடப்பட்டுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

மறுபுறம், இந்தப் போரில் பின்வாங்கப்போவதில்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

"ஈரானின் விமானப்படை மற்றும் கடற்படை முற்றிலும் சிதைக்கப்பட்டுவிட்டது. இப்போது அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வர விரும்புகிறார்கள், ஆனால் காலம் கடந்துவிட்டது.

போர் எவ்வளவு காலம் நீடித்தாலும் அதை எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்" என அவர் தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்த சண்டை பல மாதங்களாக தொடர்ந்தால், அது அமெரிக்க பொருளாதாரத்தில் மட்டுமல்ல, உலகளவில் எண்ணெய் விலைகளிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

# மகளிர் தினத்தில் தவெக தேர்தல் அறிக்கை வெளியீடு: பெண்களை கவர புது வியூகம்!

சென்னை, மார்ச். 04–

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் (ஏப்ரல்) நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சிகளில் புது வரவான தமிழக வெற்றிக் கழகம் முதல் முறையாக போட்டியிட இருக்கிறது.



எந்தவொரு கட்சியும் தேர்தலை சந்திப்பதற்கு முன்பாக, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன திட்டங்களை மக்களுக்காக கொண்டுவருவோம் என்பதை தேர்தல் அறிக்கையாக தயாரித்து வெளியிடுவது வழக்கம். தேர்தல் நேரத்து கதாநாயகனே ஒவ்வொரு கட்சிகள் வெளியிடும் தேர்தல் அறிக்கைகள் தான். அந்த வகையில், தமிழக வெற்றிக் கழகத்தில் தேர்தல் அறிக்கையை தயாரிக்க கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் அருண்ராஜ் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் ஜே.சி. டி.பிரபாகர், ராஜ்மோகன், மயூரி, சம்பத்குமார் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். இந்தக் குழுவினர் 5 மண்டலங்களுக்கு நேரடியாக சென்று பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளை சந்தித்து கருத்து கேட்டனர். இணையதளம் மூலமும் மக்களிடம் இருந்து கருத்து கேட்கப்பட்டது. இந்த நிலையில், தற்போது தவெக தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்தல் அறிக்கையை வரும் 8–ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மகளிர் தினத்தன்று கட்சியின் தலைவர் விஜய் வெளியிட இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பெண்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினரை மையமாக கொண்டு தவெக தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும், விவசாயம், மீனவர்கள், தொழிலாளர்களுக்கு அதில் முக்கியத்தும் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

# தமிழகத்தில் 29 சதவீதம் மருந்துகளில் தரம் குறைவு - ஆய்வில் தகவல்!

சென்னை, மார்ச் 04–

மத்திய, மாநில அரசுகள் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் மருந்துகளின் தரம் குறித்து ஒவ்வொரு மாதமும் ஆய்வுகளை நடத்துகிறது. மருந்தகங்கள், சில்லறை விற்பனையகங்கள், மொத்த விற்பனைக் கூடங்கள், கிடங்குகளில் ஏதேனும் சில மருந்துகளை எடுத்து பரிசோதிப்பது வழக்கம்.

மருந்து கட்டுப்பாட்டு வாரிய வழிமுறைகளின்படி உற்பத்தி செய்யப்படவில்லை என்றால் அவை தரமற்ற மருந்துகளாக கருதப்படும். அந்த வகையில், கடந்த ஜனவரி மாதம் நாடு முழுவதும் 215 மருந்துகள் தரமற்றவையாக கண்டறியப்பட்டது. அதில், தமிழகத்திலிருந்து மட்டும் 43 மருந்துகள் இடம்பெற்றிருந்தன.



தமிழகத்தில் ஜனவரி மாதத்தில் 147 மருந்துகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதில், 29 சதவீத மருந்துகள் மருந்து கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைகளின் கீழ் உற்பத்தி செய்யப்படாதது தெரியவந்தது.

இதனால், தரம் குறைவாக இருப்பதாக கணக்கில் கொள்ளப்பட்டது.

இதேபோல, கர்நாடகாவில் 21 சதவீதமும், ராஜஸ்தானில் 17 சதவீதமும் தரமற்ற மருந்துகள் இருப்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

# ஞானோதயம் பிறந்தது? தலைமை முடிவை ஏற்றுக்கொள்கிறோம்- காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர்!



சென்னை, மார்ச். 04–

தனிநபர் வேறுபாடுகள் இருக்கலாம், ஆனால் கட்சி அனைவரையும் விட பெரியது; தலைமை எடுக்கும் முடிவை ஒழுக்கத்துடன் ஏற்றுக்கொள்கிறோம். ஒற்றுமைதான் மிகப்பெரிய பலம் என காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# துபாய் மாலில் யுஏஇ அதிபர், இளவரசர் உலா!

துபாய், மார்ச். 04–

மத்திய கிழக்கு நாடுகளில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில், ஐக்கிய அரபு அமீரக (யுஏஇ) அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் மற்றும் துபாய் இளவரசர் ஷேக் ஹம்தான் பின் முகமது பின் ரஷித் அல் மக்தூம் ஆகியோர் துபாய்



மாலில் பொதுமக்களுடன் இயல்பாக உலா வந்த காட்சி அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

# போர்ப் பதற்றத்துக்கு இடையே 149 பயணிகளுடன் துபாயில் இருந்து டெல்லி வந்தடைந்த முதல் ஏர் இந்தியா விமானம்!

புதுடெல்லி, மார்ச். 04–

போர்ப் பதற்றத்துக்கு இடையே துபாயிலிருந்து டெல்லிக்கு நேற்று முதலாவது ஏர் இந்தியா விமானம் வந்து இறங்கியது. ஈரான் மீது இஸ்ரேல்– அமெரிக்கா ஆகிய நாடுகள் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றன.



இந்த போர்ப் பதற்றத்துக்கு இடையே நேற்று முன்தினம் மாலை முதல் ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரம், சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் இருந்து குறைந்த எண்ணிக்கையிலான விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அபுதாபியில் இருந்து ஒரு விமானம் நேற்று காலை டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. இதில் 149 பயணிகள் வந்தனர். அதேபோல மற்றொரு விமானம் அபுதாபியில் இருந்து கிளம்பி மும்பையில் நேற்று தரையிறங்கியது. டெல்லி இந்திரா காந்தி விமான நிலையத்திலிருந்து வெளியே வந்த பயணிகளைக் கண்டதும் அவர்களது குடும்பத்தார், உறவினர்கள் கட்டியணைத்து மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்..



இஸ்மாயில் லக்கி
டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## சென்னை மெட்ரோ ரயில் நிறுவன வேலைவாய்ப்பு!

அமைப்பின் பெயர் சென்னை மெட்ரோ ரயில் நிலையம்
பதவியின் பெயர் இணை பொது மேலாளர், துணை பொது மேலாளர், மேலாளர்
காலிப்பணியிடங்கள் 8
இணையதளம் https://chennaimetrorail.org/
அறிவிப்பு விரும்பமுள்ள அனுபவமுள்ளவர்கள் https://chennaimetrorail.org/ என்ற இணையதளத்தில் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்கலாம்.

## கெயில் இந்தியா நிறுவனத்தில் 70 காலிப்பணியிடங்கள்; கேட் 2026 அடிப்படையில் தேர்வு!

அமைப்பின் பெயர் கெயில் இந்தியா
பதவியின் பெயர் நிர்வாக டிரைய்னி (Executive Trainee)
காலிப்பணியிடங்கள் 70
இணையதளம் https://www.gailonline.com/
அறிவிப்பு கெயில் இந்தியா கேட் 2026 அடிப்படையில் ஆட்சேர்ப்பு அறிவிப்பு 2026

விண்ணப்பிப்பது எப்படி?

இப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள் https://www.gailonline.com/ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும். இணையதளத்தில் Career என்ற பிரிவில் வழங்கப்பட்டுள்ள அறிவிப்பில் விண்ணப்பிக்கவும் இணைப்பு இடம்பெற்றுள்ளது. விண்ணப்பிக்க கட்டணம் கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய நாட்கள்

இதற்கான ஆன்லைன் விண்ணப்பம் பிப்ரவரி 20–ம் தேதி தொடங்கிய நிலையில், மார்ச் 18–ம் தேதி மாலை 6 மணி வரை விண்ணப்பிக்கலாம். கேட் 2026 தேர்வு முடிவுகள் மார்ச் 19–ம் தேதி வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. முடிவுகள் வெளியானதும், காலிப்பணியிடங்கள், இடஒதுக்கீட்டிற்கு ஏற்ப விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அடுத்தக்கட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள். பொறியியல் பட்டப்படிப்பை முடித்து கேட் தேர்வை எழுதிய மாணவர்கள் மத்திய அரசு பொதுத்துறை நிறுவனத்தில் பணி செய்யும் வாய்ப்பைப் பெறலாம்.

## தேசிய தொழில்நுட்ப நிறுவனம், திருச்சிராப்பள்ளி வேலைவாய்ப்புகள்!


நிறுவனத்தின் பெயர்: தேசிய தொழில்நுட்ப நிறுவனம், திருச்சிராப்பள்ளி
அறிவிப்பு எண்: NITT/R/RC/NT/2026/04 & NITT/R/RC/NT/2026/05
வேலை வகை: மத்திய அரசு வேலைகள்
வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 22 குரூப் B & C (தொழில்நுட்பம்) பதவிகள்
வேலையிடும் இடம்: திருச்சி
தொடக்க தேதி: 25.02.2026
கடைசி தேதி: 25.03.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.nitt.edu/

## பல்மர் லாரி பணியாளர் ஆட்சேர்ப்பு 28 பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: பால்மர் லாரி & கோ. லிமிடெட்
வேலை வகை: மத்திய அரசு வேலைகள்
வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 28 ஜூனியர் அதிகாரி, உதவி மேலாளர், அதிகாரி, துணை மேலாளர், யூனிட் ஹெட் பதவிகள்
பணியிட இடம்: சென்னை, மும்பை, டெல்லி, ஜக்தல்பூர், சில்வாசா, கொல்கத்தா, பெங்களூரு, அகமதாபாத், விஜயவாடா, விசாகப்பட்டினம்
தொடக்க தேதி: 18.02.2026
கடைசி தேதி: 13.03.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.balmerlawrie.com/

## சித்த மருத்துவ ஆய்வு கழகத்தில் 14 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: மத்திய சித்த ஆராய்ச்சி கவுன்சில்
அறிவிப்பு எண்: 01/2026
வேலை வகை: மத்திய அரசு வேலைகள்
வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 14 ஆராய்ச்சி அதிகாரி (சித்தா), ஆராய்ச்சி உதவியாளர் (வேதியியல்), மருத்துவ ஆய்வக தொழில்நுட்பவியலாளர் (MLT), ஆய்வக உதவியாளர் பதவிகள்
வேலையிடும் இடம்: சென்னை
தொடக்க தேதி: 31.01.2026
கடைசி தேதி: 31.03.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

## என்.எல்.சி. 21 காலியிடங்கள்!





தேதி: 09/02/2026
நிறுவனத்தின் பெயர்: NLC இந்தியா லிமிடெட் (NLCIL)
அறிவிப்பு எண்: 20/2024
வேலை வகை: மத்திய அரசு வேலைகள்
வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 21 மருந்தாளுநர் பட்டதாரி, கண் மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர், தியேட்டர் உதவியாளர், ஆடியோலஜிஸ்ட் மற்றும் ஸ்பீச் தெரபிஸ்ட், பல் மெக்கானிக் பதவிகள்
வேலையிடும் இடம்: நெய்வேலி
தொடக்க தேதி: 09.02.2026
கடைசி தேதி: 10.03.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.nlcindia.in/



# ஒரே உலகத்தலைவர்... இன்ஸ்டாகிராமை தொடர்ந்து யூடியூபில் சாதனை படைத்த பிரதமர் மோடி!

புதுடெல்லி, மார்ச். 04–

தற்போதைய தொழில்நுட்ப உலகில், மக்களின் அன்றாட வாழ்வில் சமூக வலை தளங்கள் இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது. இன்ஸ்டாகிராம். பேஸ்புக், எக்ஸ் சமூக வலைதளங்களை பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பயன்படுத்துகின்றனர். அந்த வகையில், சமூக வலைதளமான யூடியூப் தற்போது மிகவும் பிரபலமாக உள்ளது. யூடியூப் பயனர்கள் வீடியோக்கள் மூலம் கருத்துகளை தெரிவிக்க அனுமதிக்கும் உலகின் முன்னணி வீடியோ சமூக வலைதளமாகும்.



பிரதமர் மோடி, யூடியூபில் 3 கோடி பின்தொடர்பவர்களை பெற்றிருக்கிறார். இதன் மூலம் யூடியூபில் உலகளவில் அதிக பின்தொடர்பவர்களை கொண்டுள்ள அரசியல் தலைவர் என்ற பெருமையை பெற்று உள்ளார்.

இந்த வரிசையில் 2–வது இடத்தில் பிரேசில் முன்னாள் அதிபர் ஜெயிர் போல்சனாரோ 66 லட்சம் பின்தொடர்பவர்களையும், 3–வது இடத்தில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் 40 லட்சம் பின்தொடர்பவர்களையும் கொண்டு உள்ளனர்.

பிரதமர் மோடி, கடந்த 2007–ம் ஆண்டு தன் யூடியூப் கணக்கை தொடங்கினார். இதுவரை 33 ஆயிரத்து 823 வீடியோக்கள் பதிவிட்டுள்ள அவர் 800 கோடிக்கும் அதிகமான பார்வைகளை பெற்றுள்ளார். பிரதமர் மோடியை பின்தொடர்பவர்களில் இந்தியர்களே அதிகம்.

முன்னதாக கடந்த மாதம் 26–ந்தேதி தான் இன்ஸ்டாகிராமில் 10 கோடி பின்தொடர்வோரை பெற்றிருந்தார் பிரதமர் மோடி. இன்ஸ்டாகிராமில் சர்வதேச அரசியல் தலைவர்களில் அதிகம் பேர் பின்தொடரும் தலைவர் என்ற பெருமையை இதன் மூலம் பிரதமர் மோடி பெற்றிருந்தார். இதைத் தொடர்ந்து நேற்று யூடியூபில் எந்தவொரு அரசியல் தலைவரும் தொடாத ஒரு உச்சத்தை அவர் தொட்டுள்ளார்.

பிரதமர் மோடியின் உரைகள், வெளிநாட்டு பயணங்கள் மற்றும் மனதின் குரல் போன்ற நிகழ்ச்சிகள் அவரது யூடியூப் சேனல் மூலம் உலகம் முழு வதும் உள்ள மக்களிடம் நேரடியாக சென்றடைவது இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

# காங்கிரசுக்கான தொகுதிகள் ப.சிதம்பரம் தலைமையில் இறுதி செய்யப்பட உள்ளதாக தகவல்!

சென்னை, மார்ச். 04–

தமிழக அரசியலில் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி என்பது நீண்டநாள் கூட்டணியாக மட்டுமல்லாமல், அது ஒரு கொள்கை சார்ந்த கூட்ட ணியாக இருந்து வருகிறது. இந்தநிலையில் காங்கிரசார் மத்தியில், ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற கோஷம் இந்த தேர்தலில் பலமாக ஒலிக்க தொடங்கி யது. த.வெ.க. எனும் புதிய கட்சியை தொடங்கிய நடிகர் விஜய், தன்னுடன் கூட்டணி அமைக்கும் கட்சியினருக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கு என அறிவித்தார். இதனால், ஆட்சியில் பங்கு என கோஷம் எழுப்பிய தமிழக காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் த.வெ.க.வுடன் கூட்டணி அமைக்கலாம் என்ற பேச்சு எழுந்தது.



அதேவேளையில் தி.மு.க.வுடன் கூட்டணியை தொடர வேண்டும் என்பதில் காங்கிரஸ் கட்சியில் இன்னொரு தரப்பினர் உறுதியாக இருந்தனர். இதற்கிடையில் திமுகவுடனான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையில், காங்கிரஸ் மேலிடம், ‘39 தொகுதிகளில் ஒரு தொகுதிக்கூட குறையக்கூடாது. கேட்டது கிடைத்தால் கூட்டணியில் தொடருவோம்’ என்ற நிலைப்பாட்டில் இருப்பதாக கூறப்படுகிறது. மேலும், 2 ராஜ்யசபா சீட்டுகள், ஆட்சி அதிகாரத்தில் பங்கு– உள்ளாட்சியில் பங்கு போன்றவற்றிலும் காங்கிரஸ் உறுதியாக இருப்பதாக சொல்லப்படுகிறது.

தி.மு.க. தரப்பில், இதற்கு மேல் கூட்டணியில் இருந்து காங்கிரஸ் போனால் போகட்டும் என்ற மனநிலையில் இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் தி.மு.க. – காங்கிரஸ் தொகுதி பங்கீட்டு பேச்சு வார்த்தை சுமுகமாக நடைபெறாமல் இழுபறியுடன் முடிவடைந்துள்ளது. இதற்கிடையில் முதல்– அமைச்சர் மு.க.ஸ்டாலினை காங். மூத்த தலைவர் ப.சிதம்பரம் நேற்று சந்தித்து பேசினார்.

அப்போது தொகுதி பங்கீடு குறித்து ப.சிதம்பரத்திடம் மு.க.ஸ்டா லின் விரிவாக பேசியுள்ளார்.

இந்த நிலையில், திமுக கூட்டணியில் காங்கிர சுக்கான தொகுதிகள் ப.சிதம்பரம் தலைமையில் இறுதி செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ப.சிதம்பரம் தலைமையில் தொகுதிப் பங்கீட்டை இறுதி செய்ய ராகுல் காந்தி ஒப்புதல் அளித்துள்ளதாகவும், மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் இல்லாமல் இறுதியாக உள்ளதாக சொல்லப்படுகிறது. திமுக 27 தொகுதிகள் வரை தர விரும்பும் நிலையில் 28 தொகுதிகளுடன் ஒரு ராஜ்ய சபா இடம் என பங்கீடு இறுதியாக வாய்ப்பு உள்ள தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# முன்னாள் மத்திய அமைச்சர் உன்னிகிருஷ்ணன் காலமானார்!

கோழிக்கோடு, மார்ச். 04–

காங்., மூத்த தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான கே.பி.உன்னிகிருஷ்ணன், 89, உடல்நலக் குறைவால் நேற்று காலமானார். கேரளாவின் கோழிக்கோடு மாவட்டத்தில், 1936 செப்., 20ல் பிறந்த கே.பி.உன்னிகிருஷ்ணன், சென்னையில் உள்ள மெட்ராஸ் கிறிஸ்டியன் கல்லூரியில் படித்தார்; 1960களில் காங்கிரசில் சேர்ந்தார்.



கேரளாவின் வடகரா லோக்சபா தொகுதியில், தொடர்ந்து ஆறு முறை எம்.பி.,யாக வெற்றி பெற்றவர். 1989 – –90களில், வி.பி.சிங் அமைச்சரவையில் தகவல் தொடர்பு துறை அமைச்சராக பணியாற்றினார்.

வளைகுடா போரின் போது, வெளிநாடுகளில் சிக்கியிருந்த இந்தியர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை இவர் முன்னின்று ஒருங்கிணைத்தார்.

ஒரு காலத்தில் மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராவின் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்தார். எனினும் கருத்து வேறுபாடுகளால், காங்கிரசிலிருந்து விலகினார். பின், 1995–ல் மீண்டும் காங்கிரசில் இணைந்தார்.

வயது முதிர்வு தொடர்பான பிரச்னைகளால் அவதிப்பட்டு வந்த அவர், கோழிக்கோட்டில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று காலமானார்.

அவரது மறைவுக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# அய்யப்பன் கோவிலில் பிளஸ்-1 தேர்வு எழுத அனுமதிக்கலாமா? சி.பி.எஸ்.இ., பதில் அளிக்க ஐகோர்ட்டு உத்தரவு!

சென்னை, மார்ச். 04–

சென்னையில் உள்ள தனியார் சி.பி.எஸ்.இ. பள்ளியில் பிளஸ்–1 படிக்கும் மாணவர், பள்ளிக்கூடத்தில் நடந்த துன்புறுத்தல் காரணமாக கடந்த சில நாட்களாக பள்ளிக்கூடம் செல்லவில்லை. தற்போது பிளஸ்–1 இறுதி ஆண்டு தேர்வை அந்த பள்ளிக்கூடத்தில் எழுத விரும்பாத அந்த மாணவர், வேறு ஒரு பள்ளியில் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்–ல் மனு தாக்கல் செய்தார்.




இந்த மனு நீதிபதி எம். தண்டபாணி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மாணவரின் தாய் ஆஜராகி, “ஆசிரியர்கள் தரப்பில் பாலியல் கொடுமைக்கு ஆளானதால், அந்த பள்ளிக்கூடத்தில் தேர்வு எழுத மகன் பயப்படுகிறார்” என்றார். இது ஆசிரியர்கள் மீது வைக்கும் பொய் குற்றச்சாட்டு என்று பள்ளிக்கூட தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். மேலும், தேர்வு எழுதும் அளவுக்கு வருகை இல்லாததால், வேறு பள்ளியில் தேர்வு எழுத அனுமதிக்க முடியாது என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, “தற்போது பிளஸ்–1 தேர்வை எழுதி விட்டு, பிளஸ்–2 படிப்பை வேறு மாநிலத்தில் மாணவர் படிக்கப் போவதாக கூறுகிறார். எனவே, பள்ளிக்கூடத்திற்கு அருகே அய்யப்பன் கோவில் உள்ளது. அந்த கோவிலில் மாணவர் தேர்வு எழுதட்டும். அதற்கு அனுமதி வழங்க முடியுமா?” என்று சி.பி.எஸ்.இ. மற்றும் பள்ளி நிர்வாகம் நாளை (வியாழக்கிழமை) பதில் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

# வேளச்சேரி-பரங்கிமலை பறக்கும் ரெயில் சேவையை தொடங்கி வைக்கிறார் பிரதமர்!

சென்னை, மார்ச். 04–

சென்னை கடற்கரை– வேளச்சேரி இடையே பறக்கும் ரெயில் சேவை பொது மக்களுக்கு பயனுள்ளதாக இருந்து வரும் நிலையில் அதனை பரங்கி மலை வரை நீட்டிப்பு செய்ய வேண்டும் என்று 2008–ம் ஆண்டு முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது.



பரங்கிமலை புறநகர் ரெயில் நிலையத்தோடு இணைக்கும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆனால் நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வேளச்சேரி பரங்கிமலை பறக்கும் ரெயில் திட்டம் காலதாமதம் ஆனது.

கோர்ட்டு வழக்குகளால் பணிகள் முடங்கிய நிலையில் கடந்த சில ஆண்டுகளாக விரைவுபடுத்தப்பட்டு தற்போது இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளது.

இத்திட்டம் தொடங்கி 17 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் ஒரு சில நாட்களில் இந்த வழித்தடத்தில் சேவையை தொடங்க தெற்கு ரெயில்வே முடிவு செய்துள்ளது. அனைத்து பணிகளும் நிறைவடைந்த நிலையில் நாளை அதிவேக சோதனை ஓட்டம் நடத்தப்படுகிறது.

வேளச்சேரி–பரங்கிமலை இடையான 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு சிறப்பு ரெயில் மூலம் நாளை மதியம் 2 மணி முதல் 5.30 மணி வரை இந்த சோதனை ஓட்டம் முதன்மை ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் தலைமையில் நடக்கிறது. இந்த சோதனை ஓட்டத்தின் போது அனுமதி இல்லாத நபர்கள் யாரும் ரெயில் தண்டவாளங்களை நெருங்கவோ அதன் அருகில் வேலை செய்ய வேண்டாம் என தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. சோதனை ஓட்டம் முடிந்தவுடன் சேவையை தொ டங்க திட்டமிடப்பட்டுள்ளது. பிரதமர் மோடி வேளச்சேரி–பரங்கிமலை வழித்தடத்தில் புதிய சேவையை தொடங்கிவைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக ரெயில்வே துறை வட்டாரம் தெரிவிக்கின்றன. பிரதமர் வருவதால் தான் அவரது பயண திட்டம் குறித்த அறிவிப்பு தாமதம் ஆகிறது.

திருச்சியில் 11–ந்தேதி நடக்கும் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது. அந்தப் பயணத்தின் போது ரெயில்வே திட்டங்களையும் தொடங்கி வைக்க முடிவு செய்யப்படுகிறது.

பறக்கும் ரெயில் திட்டம், பூந்தமல்லி–போரூர் மெட்ரோ ரெயில் ஆகியவற்றை தொடங்கி வைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. தெற்கு ரெயில்வே மூலம் நடந்து முடிந்துள்ள திட்டப் பணிகள், அம்ரித் பாரத் ரெயில் சேவை ஆகியவற்றை தொடங்கி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே தமிழகம் வரும் பிரதமர் மோடி பறக்கும் ரெயில் சேவை மற்றும் மெட்ரோ ரெயில் புதிய சேவையை தொடங்கி வைப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தெற்கு ரெயில்வே உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# வில்லியனூரில் இந்திய-திபெத்திய எல்லை காவல் படையினர் கொடி அணிவிப்பு!

புதுவை, மார்ச். 04–

புதுவையில் நடக்கவுள்ள சட்டமன்ற தேர்தல் பாதுகாப்பு பணிக்கு இந்திய திபெத்திய எல்லை காவல் படையினர் வந்துள்ளனர். அவர்கள் நேற்று இரவு வில்லியனூரில் நகரப் பகுதியில் கொடி அணிவிப்பு நடத்தினர்.



தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலத்தில் நடைபெற இருக்கின்ற சட்டமன்ற தேர்தலையொட்டி பல்வேறு பாதுகாப்பு பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் குலத்துங்கன், மத்திய தேர்தல் துறை அதிகாரிகள், மற்றும் காவல்துறை டிஐஜி சத்திய சுந்தரம், உத்தரவின் பேரில் ஐஜி மற்றும் சீனியர் எஸ். பி மேற்பார்வையில் தேர்தல் பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டம் மேற்கொள்ளப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பொது அமைதியை பேணுதல், குற்ற செயல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பதட்டமான ஒட்டு சாவடியை அடையாளம் காணுதல் மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவதற்காக மத்திய காவல் படை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதன் முன்னோட்டமாக வில்லியனூர் பகுதியில் சட்டம் ஒழுங்கு காவல் கண்காணிப்பாளர் சுப்ர மணியன் மேற்பார்வையில், வட்ட ஆய்வாளர் கலைச்செல்வன் மற்றும் உதவி ஆய்வாளர் திருமுருகன் தலைமையில் இந்திய திபெத்திய எல்லை காவல் படையினர் சுமார் 50–க்கும் மேற்பட்டோர் வில்லியனூர் சுல்தான்பேட்டை முதல் மாட வீதி, கோட்டைமேடு, கண்ணகி ஹை மாஸ் வழியாக சென்று கண்காணிப்பு மற்றும் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

# போர் பதற்றம்: நாமக்கல்லில் முட்டை ஏற்றுமதி அடியோடு பாதிப்பு!

நாமக்கல், மார்ச். 04–

நாமக்கல் மண்டலத்தில் 1,200–க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு தினசரி 6 கோடிக்கும் மேல் முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், அரசின் சத்துணவு திட்டத்திற்கும், வெளிமாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும் சுமார் 1 கோடி முட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதற்கான விலையை தினசரி தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழு நிர்ணயம் செய்கிறது. நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் அதன் விலையை அதிரடியாக 30 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 430 காசுகளாக குறைந்து உள்ளது. இதனால் பண்ணையாளர்கள் கவலை அடைந்து உள்ளனர்.



ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் ரம்ஜான் நோன்பு, கிறிஸ்தவர்களின் தவக்காலம் போன்ற காரணங்களால் முட்டை நுகர்வு சரியும். அதன்படி தற்போது 20 சதவீதம் வரை பொதுமக்கள் இடையே முட்டை நுகர்வு சரிந்து உள்ளது. அதனால் விற்பனையை அதிகரிக்க கொள்முதல் விலை குறைக்கப்பட்டு உள்ளது.

# தங்கம் விலை சவரனுக்கு ரூ.2,120 சரிவு!



சென்னை, மார்ச். 04–

சென்னையில் தங்கம் விலை (மார்ச் 04) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 2120 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 600 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. கிராமுக்கு 265 ரூபாய் குறைந்து ஒரு கிராம் 15,200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 2 நாட்களில் தங்கம் விலை சவரனுக்கு 3,680 ரூபாய் குறைந்துள்ளது.

# வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசு வீமராஜா காலமானார்!

தூத்துக்குடி, மார்ச். 04–

ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்ட வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடி வாரிசு உடல்நலக் குறைவால் நேற்று காலமானார்.



தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியை தலைமையிடமாக கொண்டு ஆட்சி செய்த வீரபாண்டிய கட்டபொம்மன், ஆங்கிலேயருக்கு எதிராக போராடியதால் சிறைபிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். பாஞ்சாலங்குறிச்சியில் அவரது கோட்டை அமைந்துள்ளது.

வீரபாண்டிய கட்டபொம்மனின் நான்காவது வாரிசான வீரபாண்டியதுரையின் மகனும் ஐந்தாவது வாரிசான வீமராஜா ஜெகவீரபாண்டிய சுப்பிரமணிய கட்டபொம்முதுரை, 87, பாஞ்சாலங்குறிச்சியில் குடும்பத்துடன் வசித்தார். அரசின் தியாகிகளுக்கான ஓய்வூதியம் பெற்றார்.

இந்நிலையில், நேற்று காலை தியாகிகளுக்கான ஓய்வூதிய பணத்தை எடுப்பதற்காக ஓட்டப்பிடாரத்தில் உள்ள அஞ்சலகத்துக்கு சென்றார். அங்கிருந்தபோது திடீரென அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. உடனடியாக அங்கிருந்தவர்கள் அவரை ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

இருப்பினும், சிகிச்சை பலனின்றி, அவர் உயிரிழந்தார். அவரது உடல், இன்று, பாஞ்சாலங்குறிச்சியில் அடக்கம் செய்யப்படுகிறது. இவருக்கு பேச்சியம்மாள் என்ற மனைவியும். முருகதேவி என்ற மகளும். கணபதி ராஜா என்ற மகனும் உள்ளனர்.

தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020